**முதலாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஈரோடு**

O.S.No. 23 /2014

தேதி :22.10..2019

வா.சா.1 – குமார்

**சாட்சி இன்று ஆஜராகி 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் இளங்கலை சமூகவியல் பட்டப்படிப்பு படித்துள்ளேன் . என்னுடைய பிறந்த தேதி 15.5.1979. 2ம் வாதி கல்பணா டிகிரி படித்துள்ளார். அவருடைய பிறந்ததேதி எனக்கு தெரியாது. 2ம் வாதிக்கு திருமணம் ஆகி விட்டடதுது . எனக்கு திருமணம் ஆகி விட்டது. 2ம் வாதிக்கு சுமார் 30 வயது இருக்கும் . 3ம் பிரதிவாதி சின்னச்சாமி என் அப்பாவின் அண்ணன் பெண்ணுடைய வீட்டுக்காரர். அவர் உயிருடன் இருக்கிறார் . அவர் முன்பு பஞ்சாயத்து பிரஸ்ஸிடன்டாக இருந்தார் . அவர் ரியல் எஸ்டேட் தொழிலும் செய்து கொண்டுள்ளார் என்றால் சரிதான் . 2ம்பிரதிவாதி லோகாத்தாள் என் தயார் . என் தகப்பனார் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு இறந்து விட்டார் . இந்த வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் நாங்கள் தனியாக இருந்தோம் . என்னுடைய பெற்றோர் தனியாக இருந்தார்கள் . ஆனால் பேச்சு வார்த்தை உண்டு. திருமணத்திற்கு முன்பே நானும் அம்மாவும் தனியாக குடித்தனம் இருந்தோம் . எனக்கு திருமணம் ஆனவுடன் என் அம்மா அப்பாவுடன் குடியிருந்தார் . நேரம் சரியில்லாததால் தனியாக போய்விட்டேன் மற்றபடி குடும்பத்தில் எந்த பிரச்சனையும் இல்லை. நான் ஈரோட்டில் குடியிருந்தேன் . அவர்கள் குமாரவலசில் குடியிருந்தார்கள் .

நான் ஈரோட்டில் குடியிருந்ததாக பிராதில் எந்த முகவரியும் காண்பிக்க வில்லை என்றால் சரிதான் . நான் வாடகை வீட்டில் குடியிருந்தேன். தாவாவில் நானும் என்னுடைய பெற்றோரும் குமாரவலசில் குடியிருந்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான் .

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.